## 139. உள்ளங்கையிலே என்னை

### பல்லவி

உள்ளங்கையிலே என்னை வரைந்துள்ளீர்
நான் எதற்கும் கவலை படவில்லை
உங்க கையிலே என்னை வைத்துள்ளீர்
நான்எதற்கும் சோர்ந்து போவதில்லை

### சரணங்கள்

1. செல்வங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும்
என்னோடு நீங்க இருக்கிறீர்
பெயர் புகழ் வந்தாலும் வராவிட்டாலும்
என்னோடே நீங்க வருகிறீர்
- உங்க

2. நட்புகள் மறந்தாலும் மறவாவிட்டாலும்
நீர் என்னை மறப்பதில்லையே
உறவுகள் மாறினாலும் மாறாவிட்டாலும்
நீர் என்றும் மாறுவதில்லையே
- உங்க

3. சொந்தங்கள் தேடினாலும் தேடாவிட்டாலும்
நீர் என்னை தேடி வந்தீரே
பந்தங்கள் நாடினாலும் நாடாவிட்டாலும்
நீர் என்னை நாடி வந்தீரே
- உங்க